செ.வெ.எண்.18/2016. நாள்: 10.6.16.

# பத்திரிக்கைச் செய்தி

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்பட்டு வரும் காணை, மரக்காணம், முகையூர், செஞ்சி, வானூர், வல்லம், கோலியனூர், ரிஷிவந்தியம், விக்கிரவாண்டி, மயிலம், ஒலக்கூர், மேல்மலையனூர், திருக்கோவிலூர், திருநாவலூர், தி.வெ.நல்லூர், சங்கராபுரம் மற்றும் உளுந்தூர்பேட்டை ஆகிய வட்டாரங்களில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள பூமாலை வணிக வளாகத்தில் தற்போது மின்ஆளுமை பொது சேவை மையங்கள் துவங்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் பொதுமக்கள் வருவாய் துறை மூலம் பெறக்கூடிய தங்களது வருமான சான்றிதழ், சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ், கணவரால் கைவிடப்பட்டவர் சான்றிதழ் ஆகியவற்றை சான்றிதழ் ஒன்றிற்கு ரூ.50/- கட்டணத்தில் பெற்றுகொள்ளலாம். சமூக நல துறை மூலம் செயல்படுத்தப்படும் திருமண உதவி திட்டம், விதவை மறுமணத் திட்டம், பெண் குழந்தைகளுக்கான உதவி திட்டங்களில் பயன்பெற ரூ.100/- கட்டணத்தில் விண்ணப்பிக்கலாம். மேலும், 10ம் வகுப்பு, +2 தேர்வு முடிவுகள், ஆதார் அட்டை பதிவு மற்றும் வாக்காளர் அடையாள அட்டை பெறுதல் போன்ற சேவைகளும் வழங்கப்படுகின்றன. எனவே, பொதுமக்கள் அந்தந்த வட்டாரங்களிலுள்ள வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் விழுப்புரம் பூமாலை வணிக வளாகத்திலும் செயல்படும் இச்சேவை மையங்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

9/6/16
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விழுப்புரம் மாவட்டம்.

\\Valued-85zohs I... CSC Press Release & Off Note\CSC Press Release-07.06.2016.doc

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.

9/6/16